**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4689

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.10.2021

Accepted: 12.12.2021

Published: 01.01.2022

Citation:
Karthika, K. "Akananutril Paalai Nila Makkalin Nadukkal Vazhipadu." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 218–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4689

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Akananutril Paalai Nila Makkalin Nadukkal Vazhipadu

**Dr. K. Karthika**
*Assistant Professor, Tamil Department*
*Adiyaman College of Arts and Science for Women*
*Uthangarai, Krishnagiri District, Tamilnadu, India*

**Abstract -** The Sangam period was a time of praise for love and heroism. As a symbol of heroism, every warrior was considered to be the best warrior in the war. The literature tells us that during the Sangam period, the Nadukkal was worshiped by the soldiers who died in such a fall. The role of Nadukal is very significant in conveying the culture of the ethnic people. Nadukal is the culture, belief, gratitude and reward of the Tamils. The Sangam literature narrates the tradition of worshiping the dead as warriors during the Sangam period. It also plays an important role in disseminating evidence of the doctrine of the Tamils. These stones are also known as Nadukkal, Veerankal, Veerakkal and Monument. It has been the tradition of the Tamils to pay homage to the fallen hero in battles in honor of his heroism. In that regard, this article will examine one of the Sangam literary texts entitled " Akananutril Paalai Nila Makkalin Nadukkal Vazhipadu".

**Keywords:** Sangam Literature, Akananuru, Nadukal worship, Paalai Nilam, Tolkappiyam.

# அகநானூற்றில் பாலை நில மக்களின் நடுகல் வழிபாடு

***முனைவர் கு. கார்த்திகா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்ககாலம் காதல், வீரம் எனப் போற்றிய காலகட்டம். வீரத்தின் அடையாளமாக போரிலே ஒவ்வொரு வீரனும் விழுப்புண் பட்டு வீரமணம் அடைவதே சிறந்த வீரனாக கருதப்பட்டான். அப்படி விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு சங்க காலத்தில் நடுகல் நட்டு வழிப்பட்டனர் என்பதை இலக்கியங்கள் நமக்கு எடுத்தியம்புகிறது. இனக்குழு மக்களின் பண்பாட்டை உணர்த்தும் விதமாக நடுகல்லின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. நடுகல் என்பது தமிழர்களின் பண்பாடு, நம்பிக்கை, நன்றி பாராட்டல், வெகுமதி என்று அவற்றை அணுக வேண்டியுள்ளது. சங்க காலத்தில் போரில் வீரராக இறந்தோர்க்குக் கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிப்பட்ட மரபினை சங்க இலக்கியங்கள் பறைச் சாற்றுகின்றன. தமிழர்களின் அறக்கோட்பாட்டிற்குச் சான்று பகிர்வதிலும் இதற்கு முக்கிய பங்கு உண்டு. நடுகல் வீரன்கல், வீரக்கல், நினைவுத்தூண் என்றும் அழைக்கப்படுகின்றது. போர்களில் விழுப்புண்பட்டு வீழும் வீரனுக்காக, அவனது வீரத்தைப் போற்றும் வகையில் நடுகல் நட்டு வழிபடுவது தமிழரின் மரபாக இருந்துள்ளது. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூற்றில் பாலை நில மக்களின் நடுகல் வழிபாடு என்னும் தலைப்பில் இக் கட்டுரை அமைந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *அகநானூறு, நடுகல் வழிபாடு, பாலை நிலம், தொல்காப்பியம், சங்க இலக்கியம்.*

### தொல்காப்பியர் கூற்று

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இருந்தே நடுகல் வழிபாடு தமிழகத்தில் இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. ஆகையால் தான் நடுகல் குறித்தும் நடுகல் நடும் பழக்கத்தினையும் பல்வேறு நிலைகளில் குறிப்பிடுகிறார். அதனை,

**காட்சி கால்கோ ணீர்ப்படை நடுதல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்**
**றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்**
**சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே**
***(தொல்.புறத்.நூற்பா:60)***

என்னும் நூற்பாவில் சுட்டியுள்ளார். வெட்சித் திணையின் பகுதிகளில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்னும் நடுகல் வணக்கத்தின் ஆறு படிநிலைகளைக் கூறியுள்ளார். அதாவது வீரமரணம் எய்திய மறவனின் உருவத்தைச் செதுக்குவது காட்சி எனவும், அவ்வாறு செதுக்கப்பட்ட கல்லினை நட நிமித்தம் பார்த்தல் கால்கோள் எனவும், பின் கல்லை நீராட்டித் தூய்மை செய்து பெயரும் பீடும் பொறித்தல் நீர்ப்படை எனவும் பின்னர் கல்லை அதற்கு ஏற்றவாறு நாட்டல் நடுதல் எனவும், அவ்வாறு நாட்டிய கல்லிற்குச் சிறப்புச் செய்தல் பெரும்படை எனவும், பின், அந்நடுகல்லைப் போற்றி வணங்குதல் வாழ்த்தல் எனவும் கொள்ளப்படுகிறது. வீரச்செயல்களில் இறந்த போர் மறவர்களின் புகழையும் வெளிப்படுத்தும் விதமாக விளங்குகின்றன.

**நடுகல் வழிபாடு**

இலக்கியத்தினை வாசிக்கும் பொழுது ஆநிரை கவரவோ, மீட்கவோ, விலங்குகளுடன் போரிட்டோ, தன் சமூகத்திற்காக இறக்கும் வீரனுக்கே நடுகல் எழுப்பபட்டுள்ளது. அதனைக் குடவாயிற் கீரத்தனார்,

**“வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்.. (அகம்.பாலை.35)**

என்று குறிப்பிடுகிறார். கோட்டை வீரராகிய வெட்சியார், கடையாணி இடப்பட்ட காம்பினையும் கூரிய முனையினையும் உடைய நீண்ட வேலினையுடையவர்கள். வில்லையே ஏராகக் கொண்டு வாழும் வாழ்வினைக் கொண்ட சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள் அவரைப் போர் முனையில் வென்று ஆனிரையை மீட்டு வந்தனர். பின்னர் அவ்வெட்சியாரை மேட்டு நிலத்தில் வீழ்த்தினர். தம் வலிய ஆண்மைக்கு அறிகுறியான மணல் குன்றின் மேல் உள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயில் தோகைகளைச் சூட்டினர். துடியை முழக்கி நெல்லால் ஆக்கிய கள்ளொடு செம்மறிக் குட்டியைப் பலி கொடுத்து வழிப்பட்டதாக இப்பாடல் புலப்படுத்துகிறது.

**எழுத்துடை நடுகல்**

களத்தில் இறந்தப்பட்ட வீரனின் உடம்பைப் புதைத்தவிடத்துக் கல்லில் அவ்வீரனின் பெயரும் பீடும் எழுதி நடுதல் மரபு. இறந்த இடம் இன்றி அவனை நினைவு கூறும்வகையில் பிற இடத்தே நடப்படும் கல்லும் நடுகல்லாகும். அது வீரக்கல் என்று கூறப்படும். இந்த நடுகற்களில் வீரனுடைய பெயரும் அவனுடைய பெருமையும் எழுதப்பட்டன என்பதனைச் சீத்தலைச் சாத்தனார்,

**வள் எயிற்றுச் செந்நாய் வருந்து பசிப் பிணவோடு**
**கள்ளி அம் காட்ட கடத்திடை உழிஞ்சில்**
**உள் ஊன் வாடிய சுரிமூக்கு நொள்ளை**
**பொரி அரை புதைத்த புலம்பு கொள் இயவின்,**
**விழுத் தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்**
**(அகம்.பாலை.53)**

என்னும் வரிகளில் தனிமை கொண்ட அந்த வழியிலே கூர்மையான பற்களையுடைய செந்நாய் பசியுடன் படுத்துக்கொண்டு இருக்கும். ஆண் செந்நாய் திரியும் நிலவழி. பொரிந்து போன செதிள் கொண்ட அடிமரங்கள் இருக்கும் காடு. பிழையாது எய்வதில் சிறந்த வீரர்கள், வில்லில் அம்பினைத் தொடுத்து எய்ய இறந்து பட்டோரது பெயரும் பீடும் எழுதிய எழுத்துக்களையுடைய நடுகல்லின் இனிய நிழலிலே சென்று தங்கியிருக்கும் என்று இப்பாடல் கூறுகிறது. மேலும்,

**மரம் புல்லென்ற முரம்பு உயர் நனந்தலை,**
**அரம் போழ் நுதிய வாளி அம்பின்,**
**நிரம்பா நோக்கின், நிரயம் கொண்மார்,**
**நெல்லி நீளிடை எல்லி மண்டி,**
**நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**
**வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும் (அகம். பாலை.67)**

என்று நோய்பாடியார் சுட்டுகிறார். கரந்தை மறவர்கள் அரத்தினால் தீட்டிய அராவப்பட்ட முனையைக் கொண்ட பற்களையுடைய அம்புகளையும் இடுக்கிக் குறிபார்க்கும் பார்வையினையும் உடையவர்கள். அவர்கள் பருக்கைக் கற்களுள்ள அகன்ற மேட்டு நிலத்தில், நெல்லி மரங்களைத் கொண்ட நீண்ட இடங்களில், இருட்டு வேளையில், தம் ஆனிரைகளை மீட்க வேண்டி வெட்சியாருடன் நற்போரிட்டு வென்று வீரமரணம் அடைந்தனர். நடுகற்களில் மானம் மிகுந்த அம்மறவர்களுடன்

பெயரினையும் சிறப்பினையும் பொறித்தனர். மயில் தோகையினைச் சூட்டிய விளங்கும் தன்மை கொண்ட அக்கற்களின் முன் ஊன்றிய வேலும், அதன்கண் சார்த்திய கேடயமும் செல்லும் வழிதோறும் பகைவர் போர் முனை இருப்பைப்போன்று காட்சித் தருவதாக இப்பாடல் குறிப்பிடுகிறது. மற்றொரு பாடலில்,

***கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வெல் ஊன்று பலகை வேற்றுமனை
கடுக்கும். (அகம்.பாலை.131)***

என்கிறார் மதுரை மருதன் இளநாகனர். நிரைமீட்ட போரில் இறந்துபட்ட கரந்தையோரின் பெயரும் பெருமையும் பொறித்து, மயிற்பீலி சூட்டப்பெற்று விளங்கும் சிறப்பினைக் கொண்ட நடுகல்லின் முன் ஊன்றிய வேலும், அதன்கண் சார்த்தப் பெற்ற கேடயமும் செல்லும் வழிதோறும் வேற்று வேந்தரது போர்முனையை ஒத்துக் காணப்படுவதாக இப்பாடல் அமைகிறது. மேலும்,

***கடுங்கண், மறவர் பகழி மாய்த்தென,
மருங்குல் நுணகிய பேஎம்முதிர் நடுகல்,
பெயர் பயம் படரத் தோன்றுகயில எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது, அசைவுடன்
ஆறசெல் வம்பலர் விட்டனர் கழியும்.
(அகம்.பாலை.297)***

என்கிறார் மதுரை மருதன் இளநாகனார். மறவர்கள் தம் அம்புகளை அச்சம் தரும் நடுகல்லில் தீட்டுவர். அதனால் பக்கம் தேய்ந்து மெலிந்துபோன நடுகல்லில் பெயரும் பெருமையும் விளங்கத் தோன்றுமாறு பொறிக்கப்பட்ட எழுத்துக்களை ஒன்று சேர்த்துப் பொருள் பொருத்தமுடன் படித்துப் போக இயலாதவராய், வழிநடை வருத்தத்தால் தளர்ச்சியுடன் செல்லும் வழிப்போக்கர்கள் அதனை விடுத்து அகன்று செல்வர் என்பதைக் காணமுடிகிறது. தலைவியைப் பிரிந்து வந்த தலைவனிடம் கூறுவதாகப் பாடல் இது. அதாவது,

***மரம்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணா மருங்கல்.
கூர்உளிகுயின்றகோடுமாய்எழுத்து,அவ்
ஆறசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்
(அகம்.பாலை.343)***

என்பது நீ கடந்து வந்துள்ள கானகத்துப் பாறையிலுள்ள நடுகல்லை அவ்வழிச் செல்லும் உப்பு வணிகரது வண்டிச் சக்கரத் தின் பூண் சிதையச் செய்யும். அந்நடுகல்லில், சூட்டப்பெற்ற மாலை வாடப் பெற்றதும், கழுவித் தூய்மை செய்யப்படாததுமாகிய இடத்தில், கூரிய உளியால் செதுக்கப்பெற்ற கோடுகள் தேய்ந்தொழிந்த எழுத்துக்கள், அவ்வழியில் செல்லும் புதிய வழிப்போக்கர்களுக்கு உண்மைக்கு மாறான வேறுபொருளை அறிவிக்கும் என்பதை அறிய முடிகிறது.

### இயற்கை நடுகல்

சங்க இலக்கிய நூலான அகநானூற்றில் இயற்கை நடுகல் பற்றியச் செய்தி ஒரே ஒரு பாடல் சான்று பகிர்கின்றது. அதனை மதுரை மருதன் இளநாகனார்,

***ஏறுடை இனநிரை பெயர, பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய..
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம் குயின்ற பல்பெயர் மண்ணி,
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்பு கொண்டு அறுத்த ஆர் நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர்பதிப் பெயரும் அருஞ்சுரம்
இறந்தோர் (அகம். பாலை.269)***

என்பது கரந்தை வீரர்கள், காளையையுடைய பசுக் கூட்டங்கள் மீண்டு வரவும் தாம் வாராது சுரைகள் கொண்ட வெண்மையான வேல்களையுடைய வெட்சி வீரர்கள் மீண்டும் நிரைமேல் செல்லாது தடுத்து நிறுத்தி, அவரோடு போரிட்டு

இறந்தனர். அவர்களின் நிலைபேறுடைய நல்ல புகழை நிலைநிறுத்துமாறு உயிர் பிழைத்த கரந்தை வீரர்கள், பெண் யானைகள் படுத்துக் கிடந்தாற் போன்ற குன்றுகளின் பக்கத்தே, நட்டு வைத்தாற் போன்ற இயற்கையாக எழுந்த கற்களின் அகன்ற இடத்தைச் செதுக்கிப் பல வடிவங்களை அமைத்தனர். அவற்றை நீராட்டி, மஞ்சள் பூசி, கண்ணி சூட்டி வழிப்பட்டனர். பல்லவர் காலத்துப் போல பாறைகளைக் குடைந்து படிவம் செய்யும் வழக்கம் அன்றும் இருந்தது என்பதை இப்பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

### நாள் வழிபாடு

நடுகற்களை நாள் வழிபாடு செய்து வணங்கியுள்ளனர் என்பதை இலக்கியம் கூறுகிறது. அதனை எயினந்தை மகன் இளங்கீரனார் கூறுகையில்,

***சிலைஏ றட்ட கணைவீழ் வம்பலர்***
***உயா;பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்***
***நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்***
***சுரனிடை விலங்கிய மரன்ஓங்கு இயவின்***
***(அகம்.பாலை.289)***

என்பது சான்றாகும். ஆறலைக் கள்வர் வில்வில் கோத்து எய்த அம்பால் வழிப்போக்கர்கள் இறந்துபட்டனர். அவர்தம் உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்களில் காட்டு மல்லிகை ஏறிப்படரும். அம்மல்லிகையின் மலர்கள் கொண்டு நெடிது காலம் நிலைத்து நிற்கும் நடுகல்லாகிய தெய்வத்திற்கு நாட்பலியிட்டு வழிபாடு செய்வர் என்பதை உணர்த்துகிறது.

### நிறைவாக

போரில் இறந்தப்பட்ட வீரனுக்கே நடுகல் எடுக்கப்பட்டதை இலக்கியம் காட்டுகிறது. அதாவது ஆநிரை கவர்தலும், ஆநிரை மீட்டலும் (வெட்சி, கரந்தைப் போர்) இருதிணைக்களுக்கே நிகழ்ந்துள்ளது. பெரும்பாலும் போரில் ஆநிரை மீட்கச் சென்று வெற்றிப்பெற்ற கரந்தை வீரனுக்கே நடுகல் எடுக்கப்பட்டதாக இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. நடுகல் வழிபாட்டில் எழுத்துடை நடுகல், இயற்கை நடுகல், நாள் வழிபாடு எனக் காணப்படுகின்றது. இறந்த வீரனுக்கு கல்லில் எழுத்துக்களால் அவனது பெருமையும் புகழையும் பொறிப்பது, அவற்றை மஞ்சள் நீராட்டி வணங்குவது தமிழர்களின் பண்பாட்டையும், அதன் மரபுயையும் உணர்த்துவது வெளிப்படை.